தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

ஆவணி 17, விய – திருவள்ளுவர் ஆண்டு 2037

2006 செப்டம்பர் 2, சனிக்கிழமை

மாண்புமிகு பேரவைத் தலைவர் **திரு. இரா. ஆவுடையப்பன்** *அவர்கள் தலைமையில் காலை 9–30 மணியளவில் பேரவை கூடியது.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்:

"முறைசெய்து காப்பாற்றும் மன்னவன் மக்கட்
கிறையென்று வைக்கப் படும்"

நீதிநெறியுடன் அரசு நடத்தி, மக்களைக் காப்பாற்றும் ஆட்சியாளன்தான் மக்களுக்குத் தலைவன் எனப் போற்றப்படுவான்.

1. வினாக்கள்–விடைகள்

(அ) உடுக்குறியிட்ட வினாக்கள்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினாக்கள்–விடைகள். வினா வரிசை எண் 141, மாண்புமிகு உறுப்பினர் திரு. என். நன்மாறன், மாண்புமிகு மின்சாரம் மற்றும் ஊரகத் தொழில் துறை அமைச்சர் அவர்கள்.*

141—

மின் விளக்கு வசதி

*** 75—திரு. என். நன்மாறன்:**

மாண்புமிகு மின்சாரம் மற்றும் ஊரகத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மதுரை மாரியம்மன் தெப்பக் குளத்தைச் சுற்றிலும் மின் விளக்குகள் அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

[2006 செப்டம்பர் 2

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மின்சாரம் மற்றும் ஊரகத் தொழில் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த வினா மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சருக்குரியது என்றாலும்கூட தங்கள் துறையிலேயிருந்து மின் வாரியத்திற்கு இந்த வினா அனுப்பப்பட்ட காரணத்தால் விடையளிக்க விரும்புகிறேன்.

மதுரை மாநகரில், வண்டியூர் மாரியம்மன் தெப்பக்குளத்தைச் சுற்றி தற்பொழுது High Mast விளக்கு ஒன்றும், ஆறு 40 Watts bulb-களும், இருபத்து நான்கு 250 Watts bulb-களும் தெரு விளக்குகளாகப் பொருத்தப்பட்டுள்ளன. இவை மாரியம்மன் தெப்பக் குளத்தைச் சுற்றியுள்ள 4 தெருக்களுக்கும் போதுமான வெளிச்சத்தைத் தருகின்றன.

திரு. என். நன்மாறன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாரியம்மன் தெப்பக் குளத்தைச் சுற்றிலும், சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியைப் பயன்படுத்தி மின் விளக்குகள் அமைக்கப்பட்டுள்ளன. அவை தொடர்ந்து எரிவதில்லை. அந்தத் தெப்பத் திருவிழா நடக்கின்றபோது அவற்றைக் கழற்றி வைப்பார்கள்; மீண்டும் பொருத்தி, எரிய வைக்க வேண்டும். அப்படிச் செய்கிற நேரத்திலே தாமதம் ஏற்பட்டு, நீண்ட தாமதம் ஏற்பட்டு, அங்குள்ள மக்கள் எல்லாம் குறை சொல்லி, மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கு நான் கொண்டுவந்தேன். உடனே, நான் அங்கு இருந்தபோதே, அவர் தொலைபேசியில் தொடர்புகொண்டார். அப்போது மின் விளக்குகள் எரிந்தன. பின்னர், திடீரென்று அவை நின்றுபோய்விட்டன. அவற்றிலுள்ள technical mistake–ஐக் கண்டுபிடிப்பதிலே இப்போதுள்ள அதிகாரிகளுக்கு ஏதோ சிரமம் இருக்கிறது என்று தெரிகிறது. ஆகவே, ஒரு தொடர் கவனம் தேவை என்பதற்காகத்தான் இதை எழுதி அனுப்பினேன். அந்தப் பகுதி, மிகவும் ஏழையெளிய பெண்கள் வேலைக்குச் செல்கிற பகுதி. அங்குள்ள அந்த வெளிச்சம் அவர்கள் வேலைக்குப் போய்விட்டுத் திரும்பும்பொழுது, பாதுகாப்புக்கு உதவியாக இருக்கிறது. ஆகவே, தொடர்ந்து எரிந்து அவை மக்களுக்குப் பயன்தர உரிய நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர்.

2006 செப்டம்பர் 2]

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி: பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இங்கே தெரிவித்ததைப்போல, மதுரை மாநகராட்சியால், மாரியம்மன் தெப்பக் குளத்தைச் சுற்றி, தெப்பக் குளத்தை அழகுபடுத்தும்வகையில், 96 அலங்கார விளக்குகள் நிறுவப்பட்டு இருந்ததை, தெப்பத் திருவிழா சமயம், தற்காலிகமாக அவை அகற்றப்பட்டுவிட்டன. அலங்கார விளக்குகள் அமைக்கும் பணி, மீண்டும் மாநகராட்சியால் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இப்பணி விரைவில் முடிக்கப்படும்.

எதிர்காலத்திலே, தமிழகத்தைப் பொறுத்தவரையில், தெரு விளக்குகள், கிராமங்களிலேயும், நகரங்களிலேயும், மாநகராட்சிகளிலேயும் பொருத்தப்படுகின்ற நேரத்தில், மின் கட்டணம் அதிகமாக ஆகின்ற காரணத்தினாலே, மின்சாரம் 40 சதவிகிதம் குறைவான அளவுக்குப் பயன்படுத்தக்கூடிய மின் விளக்குகளை இந்தியாவிலே, பொதுவாக இப்போது தயாரித்துக் கொண்டிருக்கிறார்கள். நம்முடைய உள்ளாட்சித் துறை அமைச்சருக்காக, இதுகுறித்து ஏற்கெனவே எடுத்துச் சொல்லியிருக்கிறேன். அந்த விளக்குகள் பொருத்தப்பட்டால், 40 சதவிகிதம் மின் கட்டணமும் குறையும்; அந்த bulb-களுடைய விலையும் மிக மலிவாக இருக்கும். எதிர்காலத்திலே, அப்படிப்பட்ட நடவடிக்கையை எடுப்பதற்கு, அந்த bulb-களை உற்பத்தி செய்கின்ற நிறுவனங்களையும் அழைத்துப் பேசி, உள்ளாட்சித் துறை, மின் துறை, முதலமைச்சர் ஆகியோருடன் கலந்து உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. என். நன்மாறன்.

திரு. என். நன்மாறன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்ன பதில், உண்மையிலேயே மகிழ்ச்சி தருகின்றது. கவியரசு வைரமுத்து அவர்களுடைய இலக்கியப் பேரவையில், கோவிந்தராம் என்கிற ஒரு பொறியாளர் இருக்கிறார். அவர் மாநகராட்சியில் பணியாற்றுகிறபொழுதுதான் இந்த வேலை நடைபெற்றது. அவர் பொறுப்பிலே இருக்கிறவரையிலும், அது எந்தச் சிரமமும் இல்லாமல் நடந்தது. ஆக, இப்போது அவர் ஓய்வு பெற்றுவிட்டார். பேராசிரியராக இருக்கிறார். தேவை ஏற்பட்டால் அதுபோன்ற அறிஞர்களையும், வல்லுநர்களையும் பயன்படுத்தி தொடர்ந்து தட்டுப்பாடில்லாமல் இந்தப் பணி நடைபெறுவதற்கு உரிய நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். நன்றி, வணக்கம்.

[2006 செப்டம்பர் 2

முற்பகல் 9–35

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர்.எம். பழனிசாமி.

திரு. ஆர்.எம். பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மின்சார விநியோகத்திலே, ஊராட்சிகளுக்கு, கிராமப்புற ஊராட்சிகளுக்குக் கொடுக்கப்படுகிற மின்சாரத்தினுடைய கட்டணம் ரூ.3.40 என்று வசூலிக்கப்படுகிறது. இன்னும் சொல்லவேண்டுமென்று சொன்னால், சில ஊராட்சி மன்றங்களிலே இந்தக் கட்டணம் கட்டுவதற்கே அவர்களிடம் நிதியில்லை. இலவச மின்சாரம் நான் கேட்கவில்லை ஊராட்சிகளுக்கு; இருந்தாலும்கூட, இந்தக் கட்டணத்தைக் குறைத்து, அங்கே வருகின்ற நிதியினைச் சரியான பயன்பாடுகளுக்குப் பயன்படுத்த ஏதாவது வழி உண்டா? அப்படியொரு திட்டம் இருந்தால்—நிச்சயமாக ஊராட்சி மன்றங்களிலே இருக்கிற பெரும் பகுதியான நிதிகள், மின்சாரக் கட்டணத்திற்கே சென்றுவிடுகின்றன என்பதுதான் உண்மை—அந்தமாதிரி திட்டத்தைப் பரிசீலிக்க வாய்ப்புண்டா என்று தங்கள்வாயிலாக மின்சாரத் துறை அமைச்சர் அவர்களைக் கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி: பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே மின்சார இலாகா, பல துறைகளுக்கு இலவசமாகவே மின்சாரத்தை வழங்கிக் கொண்டிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் சொன்னதைப்போல, சில ஊராட்சி மன்றங்களிலே மின்சாரக் கட்டணம் செலுத்துவதற்குக்கூட வருவாய் இல்லாமல், அவர்கள் மிகவும் கஷ்டப்படுகிறார்கள் என்பதை உணர்ந்து, கடந்த காலத்திலே, 1996–லேயிருந்து 2001 ஆம் ஆண்டுவரையில், முதலமைச்சராக இருந்த இன்றைய முதல்வர் கலைஞர் அவர்கள், மத்திய அரசு, ஊராட்சி ஒன்றியங்கள் மற்றும் நகராட்சிகளுக்கு வழங்குகின்ற நிதியிலிலேயிருந்து, நலிந்த கிராமப் பஞ்சாயத்துகளுக்கு உதவி செய்ய வேண்டுமென்றவகையில், அந்தப் பணத்திலேயிருந்து ஒரு தொகையை மின் வாரியத்திற்குச் செலுத்தி, எந்தக் காரணத்தைக் கொண்டும், மின்சாரக் கட்டணம் கட்டாத காரணத்தால், தெரு விளக்குகளுக்கான இணைப்பைத் துண்டிக்கக் கூடாது என்ற ஓர் உத்தரவு பிறப்பித்திருக்கிறார்கள். அந்த உத்தரவு இந்த ஆண்டிலேயும் தொடரும்; எப்போதும் தொடரும்.

2006 செப்டம்பர் 2]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.ஏ. செங்கோட்டையன்.

திரு. கே.ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மின்சாரத் துறையின்மூலமாக 10 ஆண்டுகளுக்கு முன்னால், முழுமையாக வீதி விளக்குகளைப் பராமரிக்கின்ற நிலை இருந்திருக்கிறது. ஆனால், இப்போது உள்ளாட்சித் துறையால் அது பராமரிக்கப்படுவதால், பழுது ஏற்படுகிறபோது contract basis–லே அந்தப் பழுதை நீக்கம் செய்ய வேண்டுமென்று ஒப்பந்தத்தின்மூலமாக பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. அதிலே இருக்கிற சிக்கல் என்னவென்று சொன்னால், பழுதுபார்க்கச் செல்கின்றபோது, மின்சாரத் துறையின்மூலமாக மின் தடையை ஏற்படுத்துவதற்கு அழைக்கப்படுகிறபோது அந்த நேரத்தில் அவர்கள் வருவதில்லை. ஆகவே, இப்படிப்பட்ட சிக்கல் இருக்கின்ற காரணத்தினாலே, இந்த இரண்டு துறைகளும் கலந்து, உடனடியாகப் பழுது பார்க்கின்ற நிலைகளை உடனுக்குடன் செய்து தரப்படுமா என்பதை உங்கள்மூலமாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எதிர்க்கட்சிக் கொறடா அவர்கள் குறிப்பிட்டதைப்போல, அந்த முறையே இப்போது மாற்றப்பட்டு, மின்சார இலாகாவிலே புதியதாக helper–கள் நியமனம் செய்யப்பட்டு, எல்லா கிராமங்களிலேயும் மின்சார இலாகாவே, அந்தப் பழுது பார்க்கின்ற பணியை மேற்கொள்வது என்று முடிவு செய்து, அடுத்த மாதம் அமல்படுத்த இருக்கின்றோம். அப்படிப்பட்ட ஒரு சூழ்நிலை வருகின்றபோது ஏற்கெனவே இருந்த அந்தக் குறைபாடுகள் நீக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 142, மாண்புமிகு உறுப்பினர் திரு. பெ. கண்ணன், மாண்புமிகு மின்சாரம் மற்றும் ஊரகத் தொழில் துறை அமைச்சர் அவர்கள்.

142—

மின் தட்டுப்பாடு

* 1431—**திரு. பெ. கண்ணன்:**

மாண்புமிகு மின்சாரம் மற்றும் ஊரகத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—